பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

முன்னுரை 15

1 பிரார்த்தனையின் சிறப்புகள் 17

1. பிரார்த்தனை - வணக்கவழிபாட்டின் எதார்த்தம் 17
2. பிரார்த்தனை - மறுமையில் நபிமார்களின் பரிந்துரை 18
3. பிரார்த்தனை ஒரு தொழுகை 19
4. பிரார்த்தனை ஒரு பாவமன்னிப்பு 20
5. ஏற்கப்பட்ட பிரார்த்தனை இம்மையிலும் மறுமையிலும் நன்மைகளைக் கொண்டு வரும், தீமைகளைத் தடுக்கும் 20
6. பிரார்த்தனை - நன்மை செய்வோரின் அடையாளம் 21
7. பிரார்த்தனை அல்லாஹ்விடம் மிகவும் கண்ணியமானது 21
8. பிரார்த்தனை விதியைக்கூட மாற்றிவிடும் 21
9. நம்பிக்கையாளனின் பிரார்த்தனை உறுதியாக ஏற்கப்படக்கூடியது; அது விரைவாகவோ தாமதமாகவோ அவனுக்குப் பயனளிக்கக்கூடிய வியாபாரமாகும் 22

2 பிரார்த்தனையின் நிபந்தனைகள் 23

1. ஓரிறைக்கொள்கையும் அதில் தூய்மையாக இருப்பதும் 23
2. உணவும் பானமும் ஆடையும் அனுமதிக்கப்பட்டதாக இருப்பது 23

3 பிரார்த்தனையின் ஒழுக்கங்கள் 25

1. பிரார்த்தனைக்கு முன் அல்லாஹ்வைப் புகழ்ந்து, நபியவர்கள்மீது ஸலவாத் கூறுவது, அதன்மூலமே முடிப்பது 25
2. கேட்பதை உறுதியான மனதுடன் கேட்பது 25
3. உடனே பிரார்த்தனைக்குப் பதிலளிக்கப்பட வேண்டும் என்று அவசரப்படக் கூடாது 26

4. சப்தத்தை உயர்த்தி அடுக்குமொழியில் வலிந்து பிரார்த்திக்கக் கூடாது 26
5. கைகளை உயர்த்தியவாறு கிப்லாவை முன்னோக்குவது; குறிப்பாக மழைவேண்டி பிரார்த்திக்கும்போது 27
6. பணிவு, ஈடுபாடு, ஏற்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கை ஆகியவற்றுடன் பிரார்த்திப்பது 27
7. மீண்டும் மீண்டும் பிரார்த்திப்பது 28
8. அல்லாஹ்வின் அழகிய பெயர்களைக்கொண்டு அவனை அழைத்துப் பிரார்த்திப்பது 28
9. நற்செயல்களைக் கொண்டு அவனிடம் உதவிதேடுவது 28
10. பொருள் செறிந்த, சுருக்கமான பிரார்த்தனைகளை தேர்வுசெய்வது 28

4 பிரார்த்தனைகள் ஏற்கப்படும் குறிப்பான நேரங்கள் 29

1. ஸஜ்தாவில் 29
2. நோன்பு வைத்திருக்கும்போது 29
3. அறஃபா நாளில் செய்யப்படும் பிரார்த்தனை 30
4. அல்லாஹ்வின் மகத்துவமிக்க பெயரைக் கொண்டு பிரார்த்தனை செய்வது 31
5. துன்பத்திற்குள்ளானவனின் பிரார்த்தனை 31
6. அநீதியிழைக்கப்பட்டவனின் பிரார்த்தனை 32
7. லைலத்துல் கத்ரு எனும் கண்ணிமிக்க இரவில் செய்யப்படும் பிரார்த்தனை 32
8. பயணத்தில் பிரார்த்தனை செய்தல் 32
9. பாங்கிற்கும் இகாமத்திற்குமிடையே செய்யப்படும் பிரார்த்தனை 33
10. வெள்ளிக்கிழமையில் குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்படும் பிரார்த்தனை 33
11. ஸஹருடைய நேரத்தில் செய்யப்படும் பிரார்த்தனை 34

5 குர்ஆனிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரார்த்தனைகள் 35

6 நபிமொழியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரார்த்தனைகள் 46

1

பிரார்த்தனையின் சிறப்புகள்

❄

பிரார்த்தனை வணக்கவழிபாட்டின் அடித்தளமாகும். அது அடியான் அல்லாஹ்விடம் தன் தேவையை வெளிப்படுத்துவதாகும். மார்க்க ஆதாரங்களை ஆய்வுக்கண்ணோடு பார்ப்பவர் பிரார்த்தனையின் சிறப்புகளைக் குறித்து ஏராளமான விசயங்களைக் காண்பார். இதோ, அவற்றுள் சிலவற்றை இங்கு தெளிவுபடுத்துகிறேன்:

1. பிரார்த்தனை – வணக்கவழிபாட்டின் எதார்த்தம்

ذَلِكَ بِأَنَّ اللَّهَ هُوَ الْحَقُّ وَأَنَّ مَا يَدْعُونَ مِنْ دُونِهِ هُوَ الْبَاطِلُ وَأَنَّ اللَّهَ هُوَ الْعَلِيُّ الْكَبِيرُ

அல்லாஹ்தான் உண்மையானவன். அவனைத் தவிர நீங்கள் அழைப்பவை அனைத்தும் பொய்யானவையே. அல்லாஹ்வே மிக உயர்ந்தவன், மிகப் பெரியவன். (குர்ஆன் 31:30)

وَإِذَا غَشِيَهُمْ مَوْجٌ كَالظُّلَلِ دَعَوُا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ فَلَمَّا نَجَّاهُمْ إِلَى الْبَرِّ فَمِنْهُمْ مُقْتَصِدٌ وَمَا يَجْحَدُ بِآيَاتِنَا إِلاَّ كُلُّ خَتَّارٍ كَفُورٍ

மலைகளைப் போன்ற அலைகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டால் மார்க்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவாறு அவனிடமே பிரார்த்திக்கிறார்கள். ஆனால், நாம் அவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்துவிட்டால் அவர்களில் சிலர்தாம் நிதானமாக நடந்து கொள்கிறார்கள். மிகவும் நன்றிகெட்ட துரோகிகள்தான் நம் சான்றுகளை நிராகரிக்கிறார்கள். (குர்ஆன் 31:32)

يَدْعُونَ رَبَّهُمْ خَوْفًا وَطَمَعًا وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ

தம் படுக்கைகளிலிருந்து அவர்கள் எழுந்து அச்சத்துடனும் ஆர்வத்துடனும் தம் இறைவனிடம் பிரார்த்திப்பார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவும் செய்வார்கள். (குர்ஆன் 31:16)

களாக இருந்தார்கள். (அறிவிப்பு: ஆயிஷா ﵂, புகாரீ 798, முஸ்லிம் 589)

6. பிரார்த்தனை – நன்மை செய்வோரின் அடையாளம்

وَادْعُوهُ خَوْفًا وَطَمَعًا إِنَّ رَحْمَةَ اللهِ قَرِيبٌ مِنَ الْمُحْسِنِينَ

அச்சத்தோடும் ஆசையோடும் அவனிடமே பிரார்த்தியுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு நெருக்கமாகவே உள்ளது. (குர்ஆன் 7:56)

7. பிரார்த்தனை அல்லாஹ்விடம் மிகவும் கண்ணியமானது

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَيْسَ شَيْءٌ أَكْرَمَ عَلَى اللهِ تَعَالَى مِنَ الدُّعَاءِ

அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனையைவிட கண்ணியம் பெற்றது வேறெதுவும் இல்லை. (அறிவிப்பு: அபூ ஹுரைரா ﵁, ஸுனனுத் திர்மிதீ 3370, ஸஹீஹுல் ஜாமிஉ 5392)

إِنَّ رَبَّكُمْ تَبَارَكَ وَتَعَالَى حَيِيٌّ كَرِيمٌ يَسْتَحْيِي مِنْ عَبْدِهِ إِذَا رَفَعَ يَدَيْهِ إِلَيْهِ أَنْ يَرُدَّهُمَا صِفْراً

நிச்சயமாக உங்கள் இறைவன் வெட்கப்படக்கூடியவன், கண்ணியமானவன். தனது அடியான் கைகளை உயர்த்தி தன்னிடம் கேட்டுவிட்டால் அவனை வெறுங்கையோடு திருப்பி அனுப்புவதற்கு அல்லாஹ் வெட்கப்படுகிறான். (அறிவிப்பு: ஸல்மான் ﵁, ஸுனன் அபூதாவூது 1488, ஸஹீஹுல் ஜாமிஉ 1768)

8. பிரார்த்தனை விதியைக்கூட மாற்றிவிடும்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

لاَ يَرُدُّ الْقَضَاءَ إِلاَّ الدُّعَاءُ وَلاَ يَزِيدُ فِي الْعُمُرِ إِلاَّ البِرُّ

பிரார்த்தனையைத் தவிர வேறு எதுவும் விதியை மாற்றாது. நன்மையைத் தவிர வேறு எதுவும் வாழ்நாளை அதிகப்படுத்தாது. (அறிவிப்பு: ஸவ்பான் ﵁, திர்மிதீ 2139, அஸ்ஸஹீஹா 154)

إِنَّ الدُّعَاءَ يَنْفَعُ مِمَّا نَزَلَ وَمِمَّا لَمْ يَنْزِلْ؛ فَعَلَيْكُمْ عِبَادَ اللهِ بِالدُّعَاءِ

நிச்சயமாக பிரார்த்தனை, அடைந்த துன்பத்திற்கும் அடையாத துன்பத்திற்கும் பயனளிக்கக்கூடியது. ஆகவே, அல்லாஹ்வின்

2

பிரார்த்தனையின் நிபந்தனைகள்

❄

1. ஓரிறைக்கொள்கையும் அதில் தூய்மையாக இருப்பதும்

قُلِ اللهَ أَعْبُدُ مُخْلِصًا لَهُ دِينِي *فَاعْبُدُوا مَا شِئْتُمْ مِنْ دُونِهِ

நீர் கூறும்: 'என் வணக்கத்தை அவனுக்கு மட்டுமே உரித்தாக்கி அவனையே நான் வணங்குகிறேன். அவனை விடுத்து நீங்கள் விரும்பியவர்களை வணங்கிக் கொள்ளுங்கள்.'(குர்ஆன் 39:14,15)

لَهُ دَعْوَةُ الْحَقِّ وَالَّذِينَ يَدْعُونَ مِنْ دُونِهِ لاَ يَسْتَجِيبُونَ لَهُمْ بِشَيْءٍ إِلاَّ كَبَاسِطِ كَفَّيْهِ إِلَى الْمَاءِ لِيَبْلُغَ فَاهُ وَمَا هُوَ بِبَالِغِهِ وَمَا دُعَاءُ الْكَافِرِينَ إِلاَّ فِي ضَلاَلٍ

உண்மையான பிரார்த்தனை அவனுக்கே உரியது. அவனைத் தவிர மக்கள் அழைக்கும் தெய்வங்கள் அவர்களுக்குப் பதிலளிக்க மாட்டாது. அவர்களின் அழைப்பிற்கு உதாரணம் தண்ணீர் தன் வாய்க்குள் செல்ல வேண்டும் என்பதற்காக அதனை நோக்கி தன் இரண்டு கைகளையும் விரித்து வைத்திருப்பவனைப் போன்ற தாகும். அது அவனது வாயினுள் தானாகச் சென்றுவிடாது. நிராகரிப்பாளர்களின் பிரார்த்தனைகள் யாவும் வீணானவையே. (குர்ஆன் 13:14)

2. உணவும் பானமும் ஆடையும் அனுமதிக்கப்பட்டதாக இருப்பது

ذَكَرَ النَّبِيُّ صلى الله عليه وسلم الرَّجُلَ يُطِيلُ السَّفَرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُدُّ يَدَيْهِ إِلَى السَّمَاءِ يَا رَبِّ يَا رَبِّ وَمَطْعَمُهُ حَرَامٌ وَمَشْرَبُهُ حَرَامٌ وَمَلْبَسُهُ حَرَامٌ وَغُذِيَ بِالْحَرَامِ فَأَنَّى يُسْتَجَابُ لِذَلِكَ

நபியவர்கள் ஒரு மனிதனைக் குறித்து நினைவுகூர்ந்தார்கள். அவன் நீண்ட பயணம் செய்து தூசிபடிந்த, பரட்டைத் தலையுடன் தனது இரண்டு கைகளையும் வானத்தின்பால் உயர்த்தி, 'இறைவா!

3

பிரார்த்தனையின் ஒழுக்கங்கள்

❄

1. பிரார்த்தனைக்கு முன் அல்லாஹ்வைப் புகழ்ந்து, நபியவர்கள்மீது ஸலவாத் கூறுவது, அதன்மூலமே முடிப்பது

سَمِعَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ رَجُلًا يَدْعُو فِي صَلَاتِهِ فَلَمْ يُصَلِّ عَلَى النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَجِلَ هَذَا ثُمَّ دَعَاهُ فَقَالَ لَهُ أَوْ لِغَيْرِهِ إِذَا صَلَّى أَحَدُكُمْ فَلْيَبْدَأْ بِتَحْمِيدِ اللهِ وَالثَّنَاءِ عَلَيْهِ ثُمَّ لْيُصَلِّ عَلَى النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ثُمَّ لْيَدْعُ بَعْدُ بِمَا شَاءَ

ஒரு மனிதர் தொழுகையில் நபியவர்கள்மீது ஸலவாத் சொல்லாமல் பிரார்த்தித்துக்கொண்டிருந்ததை நபியவர்கள் செவியுற்றார்கள். 'இவர் அவசரப்பட்டுவிட்டார்' என்று நபியவர்கள் சொன்னார்கள். பிறகு அந்த மனிதரை அழைத்து, 'உங்களில் ஒருவர் தொழுதால் அவர் முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்துகொள்ளட்டும். பிறகு நபியவர்கள்மீது ஸலவாத் சொல்லட்டும். பிறகு தான் விரும்பிய விசயங்களை அவர் கேட்டுக்கொள்ளட்டும்' என்று கூறினார்கள். *(அறிவிப்பு: ஃபலாலா இப்னு உபைதா ﵁, ஸுனனுத் திர்மிதீ 3477, ஸஹீஹுல் ஜாமிஉ 648)*

2. கேட்பதை உறுதியான மனதுடன் கேட்பது

إِذَا دَعَا أَحَدُكُمْ فَلْيَعْزِمِ الْمَسْأَلَةَ وَلاَ يَقُولَنَّ اللهُمَّ إِنْ شِئْتَ فَأَعْطِنِي، فَإِنَّهُ لاَ مُسْتَكْرِهَ لَهُ

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: 'நீங்கள் பிரார்த்தனை செய்தால், தான் விரும்பும் விசயத்தை உறுதியாகக் கேளுங்கள். 'அல்லாஹ்வே நீ நாடினால் கொடு' என்று கேட்காதீர்கள். அவனை நிர்ப்பந்தப்படுத்துபவர் யாரும் இல்லை.' *(அறிவிப்பு: அனஸ் இப்னு மாலிக் ﵁, புகாரீ 6338)*

4

பிரார்த்தனைகள் ஏற்கப்படும் குறிப்பான நேரங்கள்

❄

1. ஸஜ்தாவில்

كَلاَّ لاَ تُطِعْهُ وَاسْجُدْ وَاقْتَرِبْ

'தூதரே, அவர்களுக்கு நீர் கட்டுப்படாதீர். சிரம்பணிவீராக; நம்மை நெருங்கவீராக.' *(குர்ஆன் 96:19)*

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

أَقْرَبُ مَا يَكُونُ الْعَبْدُ مِن رَّبِّهِ وَهُوَ سَاجِدٌ فَأَكْثِرُوا الدُّعَاءَ

'அடியான் ஸஜ்தாவில் இருக்கும்போதுதான் தன் இறைவனுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளான். ஆகவே, அந்நிலையில் அதிக மதிகம் பிரார்த்தனை செய்யுங்கள்.' *(முஸ்லிம் 482)*

2. நோன்பு வைத்திருக்கும்போது

شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنْزِلَ فِيهِ الْقُرْآنُ هُدىً لِلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَى وَالْفُرْقَانِ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ وَمَنْ كَانَ مَرِيضًا أَوْ عَلَى سَفَرٍ فَعِدَّةٌ مِنْ أَيَّامٍ أُخَرَ يُرِيدُ اللهُ بِكُمُ الْيُسْرَ وَلاَ يُرِيدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللهَ عَلَى مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ ۞ وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ

றமளான் மாதத்தில்தான் குர்ஆன் இறக்கப்பட்டது. அது மக்களுக்கு வழிகாட்டியாகவும் நேர்வழியை தெளிவாக்கக்கூடியதாகவும் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக்கூடியதாகவும் இருக்கின்றது. எனவே உங்களில் அம்மாதத்தை அடைபவர் நோன்பு நோற்கட்டும். உங்களில் நோயாளியாகவோ,

5

குர்ஆனிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரார்த்தனைகள்

❄

الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ *الرَّحْمَانِ الرَّحِيمِ مَالِكِ يَوْمِ الدِّينِ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِينُ اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ
الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلاَ الضَّالِّينَ

அனைத்துப் புகழும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ் வுக்கே. அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்பு டையோன்; தீர்ப்பு நாளின் அதிபதி. உன்னையே நாங்கள் வணங்குகிறோம், உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம். எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக. அது நீ எவர் களுக்கு அருள்புரிந்தாயோ அவர்களின் வழி; உன் கோபத் திற்குள்ளானோர் மற்றும் நெறிதவறியோரின் வழியுமல்ல. *(குர்ஆன் 1:1-6)*

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

எங்கள் இறைவா! எங்களுக்கு இம்மையிலும், மறுமை யிலும் நன்மையை அருள்வாயாக; எங்களை நரகநெ ருப்பின் வேதனையை விட்டும் காப்பாற்றுவாயாக! *(குர்ஆன் 2:201)*

رَبَّنَا أَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِينَ

எங்கள் இறைவா! எங்கள்மீது பொறுமையைப் பொழி வாயாக! எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக!

6

நபிமொழியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரார்த்தனைகள்

❄

لاَ إِلَهَ إِلَّا اللهُ العَظِيمُ الحَلِيمُ لاَ إِلَهَ إِلَّا اللهُ رَبُّ العَرْشِ العَظِيمِ لاَ إِلَهَ إِلَّا اللهُ رَبُّ السَّمَوَاتِ وَرَبُّ الأَرْضِ وَرَبُّ العَرْشِ الكَرِيمِ

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாரும் இல்லை. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, அவன் மகத்தான அர்ஷின் அதிபதி. அல்லாஹ் வைத் தவிர வேறு இறைவன் இல்ல, அவன் வானங்கள் மற்றும் பூமியின் அதிபதி; கண்ணியமிக்க அர்ஷின் அதிபதி. (அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ﷺ, புகாரீ 6346, முஸ்லிம் 2730)

لا إِلَهَ إِلا اللهُ وَحْدَهُ أَعَزَّ جُنْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَغَلَبَ الأَحْزَابَ وَحْدَهُ فَلا شَيْءَ بَعْدَهُ

அல்லாஹ் ஒருவனைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறை வன் இல்லை. அவன் தனது படையை மேலாங்கச் செய் தான்; தனது அடியாருக்கு உதவி செய்தான்; படையினர் அனைவரையும் அவன் தனியனாக மிகைத்துவிட்டான். அவனுக்குப் பிறகு எதுவும் இல்லை. (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, புகாரீ 3888, முஸ்லிம் 2724)

لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ سُبْحَانَكَ إِنِّي كُنْتُ مِنَ الظَّالِمِينَ

உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை. நீ தூய்மையானவன். நிச்சயமாக நான் அநியாயக்